# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது


අංක 2368/24 - 2024 ජනවාරි මස 24 වැනි බදාදා - 2024.01.24

2368/24 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழமைந்த அறிவித்தல்**

மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 51 ஆம் பிரிவின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, 2023 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 2334/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிய 2147/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 5(அ) ஆம் பந்தியினை பின்வருமாறு இத்தால் திருத்தியமைக்கின்றேன் :

1. “2023, செத்தெம்பர் 15 அல்லது அதற்கு முன்” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களுக்காக “2022, மே 01 முதல் ஆரம்பித்து 2023, செத்தெம்பர் 15 வரை முடிவடையும் காலப்பகுதியில்” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களைப் பிரதியீடு செய்தல் ;
2. “2023, ஒற்றோபர் 31” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களுக்காக “2024, யூன் 30” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களைப் பிரதியீடு செய்தல் ; மற்றும்
3. “2024, சனவரி 31” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களுக்காக “2024, செத்தெம்பர் 30” என்ற சொற்கள் மற்றும் இலக்கங்களைப் பிரதியீடு செய்தல்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2024, சனவரி 24.

EOG 01-0212


1A - PG 6627 — 456 (2024/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.